# குறுவை தொகுப்புத் திட்டம் ஆகஸ்ட் 15 வரை நீட்டிப்பு

**திருச்சி, ஜூலை 27:** தமிழகத்தில் ரூ.75 கோடி குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் ஆக. 15 வரை நீட்டிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.

'வேளாண் சங்கமம்-2023' எனும் மூன்று நாள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கநிகழ்வுதிருச்சியில்வியாழக்கிழமை தொடங்கியது. இதைத் தொடக்கி வைத்தும், மேலும், 50 ஆயிரம் இலவச மின் இணைப்புகள் வழங்கும் வகையில் 12 பேருக்கு அதற்கான ஆணைகளை வழங்கியும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

மற்ற துறைகளைப் போல வேளாண் துறையை நினைத்த உடனே வளர்த்துவிட முடியாது. மற்ற துறைகளை வளர்க்க நிதி வளம் இருந்தால் போதும். ஆனால், வேளாண் துறையை வளர்க்க, நிதித்துறை மட்டுமல்ல, நீர்வளமும் வேண்டும். திமுக ஆட்சி அமைந்ததும் நீர் வளமும் கைகொடுத்தது. பருவ மழையும் முறையாகப் பெய்து உழவர்களுக்கு உதவியாக இருந்தது.

**உழவர்களின் உள்ளம் ஈரமானது:** விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள்களை வேளாண் துறை குறித்த காலத்தில் வழங்கியது. அதனால், உற்பத்தி பெருகியது. உற்பத்தி பரப்பும் அதிகமானது. மண்ணும் ஈரமானது. உழவர்களின் உள்ளமும் ஈரமானது. மண்ணும் மக்களும் மகிழ்ந்தனர்.

'தமிழ் மண் வளம்' என்ற இணையதளம், உழவன் செயலி, கிரெய்ன்ஸ் ஒற்றைச்சாளர வலைதளம் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கு நலத்திட்டங்களையும், பயனுள்ள தகவல்களையும் வழங்கி வருகிறோம்.

கடந்த அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகளில் 2.20 லட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டன. திமுக ஆட்சி அமைந்த பிறகு, கடந்த இரண்டாண்டுகளில் 2 லட்சம் இலவச மின் இணைப்புகளை வழங்கியுள்ளோம்.

**நவீன தொழில்நுட்ப அறிவு:** உழவர்களது உற்பத்தி அதிகமாக வேண்டுமானால், உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமானால் வேளாண்மையில் நவீன தொழில்நுட்ப அறிவு பயன்படுத்தப்பட வேண்டும். உயர்ந்த விளைச்சல் தரவல்ல புதிய ரகங்கள், பாரம்பரிய நெல் ரகங்கள், வருமானத்தைப் பெருக்க நவீன தொழில்நுட்பங்கள், உத்திகள், நவீன வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தி மூலமாக இயங்கும் கருவிகள் போன்றவைகளை உழவர்களுக்கு ஊட்டுவதற்கு இதுபோன்ற வேளாண் சங்கமங்கள் மிகவும் தேவையானது.

தமிழக வேளாண்மைத் துறை மட்டுமல்லாமல், மத்திய அரசின் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்களும் வருகை தந்துள்ளன. இதுவே மிகப்பெரிய சங்கமமாக அமைந்துள்ளது. இத்தகைய கூட்டு முயற்சிகள் அனைத்து துறைகளிலும் தேவைப்படுகிறது. வேளாண்மை என்பது வாழ்க்கையாக, பண்பாடாக இருந்தாலும் அது லாபம் தரும் தொழிலாக முழுமையாக இன்னும் மாறவில்லை.

**மாபெரும் முன்னெடுப்பு:** உழவர் சந்தையின் அடுத்த கட்டமாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை திமுக ஆட்சிக்காலத்தில் உருவாக்கியிருக்கிறோம். இத்தகைய நிறுவனங்களுக்கு மூலதன உதவியும் - கடன் உத்தரவாதமும் தரப்பட்டுள்ளன. அவர்களது உற்பத்திப் பொருள்கள் மாநகராட்சி அங்காடிகளில் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் உழவர்களுக்காகச் செய்யப்பட்ட மாபெரும் முன்னெடுப்பு இது.

வேளாண்மை என்பது நிலம் இருப்பவர்கள் மட்டும் செய்யும் தொழிலாக இல்லாமல், விரும்பியவர் அனைவரும் செய்ய முன்வரும் தொழிலாக மாற வேண்டும். உழவர்களுக்கு தொழில்நுட்பம் தெரிந்திருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு வேளாண்மை தெரிந்திருக்க வேண்டும். இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டால் வேளாண்மை என்பது வர்த்தகத் தொழிலாக மாறும்.

**ஆக.15 வரை குறுவை தொகுப்பு:** நிகழாண்டு குறுவை சிறப்புத் தொகுப்பு பெறுவதற்கான இறுதி நாளை ஆக.15 வரை நீட்டித்து தரவேண்டும் என்ற டெல்டா மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை அரசு ஏற்று, ரூ.75.95 கோடி குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை பெறுவதற்கான இறுதி நாள் ஆக. 15 வரை நீட்டிக்கப்படும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

நிகழ்வில், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெள்ளி ஏர் கலப்பையை பரிசாக வழங்கினார். அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட ஆட்சியர் மா. பிரதீப்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி



திருச்சியில் வியாழக்கிழமை நடைபெற்ற வேளாண் சங்கமம்- 2023 கண்காட்சி தொடக்க விழாவில் பெண் விவசாயிக்கு இலவச மின் இணைப்புக்கான ஆணையை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின், உடன் (இடமிருந்து) அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார்.

## அதிக மகசூல் பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 2.25 லட்சம் பரிசு

பாரம்பரிய நெல் சாகுபடியைஊக்குவிக்கும்பொருட்டு அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் விருதுகளும், ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, நிகழாண்டு அதிக மகசூல் பெற்ற நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ரங்கசாமிக்கு முதல் பரிசாக ரூ.1 லட்சத்தை அவரது மனைவி வீரம்மாளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இரண்டாவது பரிசாக ரூ.75 ஆயிரம் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மு.சரவணனுக்கும், மூன்றாவது பரிசாக ரூ. 50 ஆயிரம் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மூர்த்திக்கும் வழங்கப்பட்டது.

## பிரிய மனமில்லை: முதல்வர் நெகிழ்ச்சி

**சென்னை, ஜூலை 27:** டெல்டாவை விட்டு பிரிய மனமின்றி கடமையாற்ற தலைநகர் சென்னை திரும்புவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் கட்சி மற்றும் அரசு ரீதியாக பல்வேறு நிகழ்ச்சிகளில் முதல்வர் பங்கேற்றார். 2 நாள்கள் பயணத்தை முடித்துக் கொண்டு வியாழக்கிழமை இரவு அவர் சென்னை திரும்பினார்.

முன்னதாக, அவர் ட்விட்டரில் வெளியிட்ட பதிவு: இரண்டு நாட்களாக டெல்டா மண்வாசத்தில் பிரிய மனமின்றி கடமையாற்ற சென்னை திரும்புகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், பயண நிகழ்வுகளைத் தொகுத்து குறு விடியோ காட்சியாகவும் அந்த பதிவில் வெளியிடப்பட்டுள்ளது.

## மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பப் பதிவு: முதல்வர் திடீர் ஆய்வு

திருச்சியில் வேளாண் சங்கமம் நிகழ்வை தொடங்கிவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், பின்னர் கார் மூலம் தஞ்சாவூருக்கு புறப்பட்டார். வழியில் செங்கிப்பட்டி அருகே மனையேறிப்பட்டியில் உள்ள கிராம சேவை மையத்தில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட விண்ணப்பங்களை பதிவேற்றும் பணியை ஆய்வு செய்தார்.

அப்போது, மகளிரிடம் விண்ணப்பங்களை பதிவு செய்வதில் சிரமங்கள் ஏதேனும் உள்ளனவா, பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உங்கள் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களை அளிக்கிறார்களா என்று முதல்வர் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, முகாமில் பணிபுரியும் பணியாளர்களிடம், விண்ணப்பங்கள் தினமும் எவ்வளவு பதிவு செய்யப்படுகிறது என விசாரித்த முதல்வர்,

விண்ணப்பங்களை பதிவு செய்ய வரும் மகளிர் கேட்கும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களை அளிக்க வேண்டும், விண்ணப்பங்களை பதிவு செய்ய திர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# செயற்கை நுண்ணறிவுச் சவால்: இந்தியா வெல்லுமா?

உலகம் முழுவதிலும் செயற்கை நுண்ணறிவு (ஆர்ட்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ் – ஏஐ) குறித்த பேச்சாக இருக்கிறது. செயற்கை நுண்ணறிவின் அதிவேகமான பாய்ச்சலைக் கண்டு, இதனை வரவேற்பதா, கட்டுப்படுத்துவதா என உலக நாடுகளும் மக்களும் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அமெரிக்காவின் 'ஓபன் ஏஐ' ஆராய்ச்சியாளர்கள் மிகச் சரியாகக் கூறியிருப்பதுபோல, ஏஐ தொடர்பான சட்டங்களை இப்போதுதான் உருவாக்கத் தொடங்கி இருக்கிறோம்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான பல விஷயங்களைப் புரிந்துகொண்டால்தான், இதை அணுகுவதற்கான வழிமுறைகளை உருவாக்க முடியும். 2017-இல் கூகுள் பிரெய்ன் (தற்போது இது கூகுள் ரிசர்ச் ஆகி விட்டது) நிறுவனம் வெளியிட்ட கணினியியல் ஆய்வறிக்கையில் டிரான்ஸ்பார்மர்கள் குறித்துக் குறிப்பிடப்பட்டது.

கணினியால் இயங்கும் இயந்திரங்கள் அதற்கான கட்டளைகளை தாங்களே மனிதரைப் போலவே சிந்தித்து வடிவமைத்துக் கொள்வதுதான் 'டீப் லேர்னிங் கட்டமைப்பு' என்று கூறப்படுகிறது. இதனையே 'டிரான்ஸ்பார்மர்' என்று கூகுள் பிரெய்ன் குறிப்பிட்டது. இந்தக் கண்டுபிடிப்பானது சில ஆண்டுகளில் மிகப் பிரமாண்டமாக வளர்ந்து ஒரு சாம்ராஜ்யமாக நிலைகொள்ளும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

கூகுள் பிரெய்னைத் தொடர்ந்து, ஓபன் ஏஐயும் டிரான்ஸ்பார்மர் மேம்பாட்டுப் பணிகளில் கவனம் செலுத்தியது. அந்நிறுவனம் ஜிபிடி (ஜெனரேட்டிவ் பிரீ-டிரெய்ன்டு டிரான்ஸ்பார்மர்) எனப்படும் முன்பயிற்றுவிக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்களை வடிவமைப்பதில் தீவிரம் காட்டியது. மனிதர்களிடமிருந்து கிடைக்கும் பதில் தரவுகளின் அடிப்படையில் இயந்திரங்களே தங்கள் செயல்பாட்டைத் தீர்மானிக்கும் வலுவூட்டிய அறிதல் தொழில்நுட்பத்தின் மூலம் (ஆர்எல்ஹெச்எஃப்) இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாபெரும் கணினி மொழியாக்கப் பணி நமது இன்றைய உலகை பெருமளவில் மாற்றியமைத்திருக்கிறது. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் சாட்பாட் (கணினிக்கும் மனிதருக்கும் இடையிலான உரையாடல் மென்பொருள்), வடிவ உருவாக்கம், தேடுபொறிகள் போன்றவை, நம்மை அதிவேகமான மாற்றத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றன. இதுவரை காணாத வகையில் உலகம் தொழில்நுட்பரீதியாக விரைவாக மாறி இருக்கிறது; இன்றும் மாறிக்கொண்டிருக்கிறது.

விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்பாளர்களும், செயற்கை நுண்ணறிவின் அதிவேகப் பாய்ச்சலால் மிரண்டுபோயிருக்கிறார்கள். செயற்கை நுண்ணறிவின் கட்டுப்பாடற்ற பெருக்கத்தால் விளையக்கூடிய அபாயங்களை எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.


மனீஷ் திவாரி

இந்த விஷயத்தில் தேவையான கட்டுப்பாட்டையும் கண்காணிப்பையும் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம், சீனா, அமெரிக்கா ஆகியவை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன. செயற்கை நுண்ணறிவு தொடர்பான சிக்கல்களை எதிர்கொள்வதற்கான சட்டங்களை அவை வடிவமைத்து வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் வரைவு ஏஐ ஒழுங்குமுறை சட்டம், சீனாவின் ஏஐ ஒழுங்குமுறை வரைவு, அமெரிக்காவின் ஏஐ மசோதா ஆகியவை இத்திசையில் புத்திசாலித்தனமான நடவடிக்கைகள் எனலாம்.

இந்த விஷயத்தில், உலக அளவிலான பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பின் (ஓஇசிடி) பரிந்துரைகள், அமெரிக்க நாடாளுமன்ற மேலவையின் பெரும்பான்மைத் தலைவர் சக் ஷுமரின் திட்டங்கள், ஏஐ துறையில் பிரிட்டனை முன்னிலைப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அந்நாட்டுப் பிரதமர் ரிஷி சுனக்கின் விருப்பங்கள் போன்றவற்றையும் செயற்கை நுண்ணறிவுக் கட்டுப்பாட்டுக்கான பிற முன்மொழிவுகளாகக் கொள்ளலாம். எனினும் இதுவரை யாராலும் ஏஐ குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான நடைமுறைகளை வகுக்க முடியவில்லை.

**செயற்கை நுண்ணறிவை மனிதநேயத்துக்கு எதிரான ஓர் அசுரனாக உருவகப்படுத்தும் குறுகியகால அதீத மதிப்பீட்டுத் தாக்கத்திலிருந்து விடுபட்டு, இதனை கண்டுபிடிப்புகளுக்கும் திட்டங்களுக்கும் நாற்றங்காலாக மாற்றுவது எப்படி என்று இந்தியா ஆராய வேண்டும்.**

இந்நாடுகளின் ஏஐ கட்டுப்பாட்டு முயற்சிகளில் மூன்று முக்கியமான பிரச்னைகள் உள்ளன. முதலாவதாக, சீனாவோ, ஐரோப்பிய ஒன்றியமோ, செயற்கை நுண்ணறிவால் விளையும் அபாயங்களை மட்டுமே கருத்தில்கொண்டு, அவற்றை எதிர்கொள்ளும் நிலைப்பாட்டில் வரைவுச் சட்டங்களை உருவாக்கி உள்ளன.

ஜி7 நாடுகளின் (கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன்) தகவல் தொழில்நுட்ப அமைச்சர்களும், ஐரோப்பிய ஒன்றிய வரைவு மசோதாவின் அம்சங்களை ஆதரித்துள்ளனர். சீனாவோ, இதில் கூடுதலாக தகவல் கட்டுப்பாடு மீதான அரசின் ஒழுங்குமுறையை உறுதிப்படுத்துகிறது.

வளரும் நாடுகளைப் பொருத்த வரையிலும், இத்தகைய கடுமையான கட்டுப்பாடுகள் இதுவரை அணுகாத துறைகளில் ஆராய்ச்சி மேம்பாட்டுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிட வாய்ப்புள்ளது. மக்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்கவும், உலக அளவிலான பெரும் குழுமத் தொழில் நிறுவனங்களின் ஏகபோகத்தைக் கட்டுப்படுத்தி சுரண்டலைத் தடுக்கவும், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை வளரும் நாடுகள் பயன்படுத்துவது கட்டாயமாகும்.

செயற்கை நுண்ணறிவை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது இரண்டாவது பிரச்னையாகும். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இந்த அதிநவீனத் தொழில்நுட்பத்தை முறைப்படுத்த, பொதுவான கொள்கை முடிவுகளின் அடிப்படையில் சட்ட வரைவுகளை ஒருங்கிணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமெரிக்காவின் வாஷிங்டனும் பெல்ஜியத்தின் பிரஸ்ஸெல்ஸும், இருதரப்பு வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பக் கூட்டமைப்பின் மூலமாக செயற்கை நுண்ணறிவைக் கட்டுப்படுத்தும் உலகளாவிய செயல்முறைக்கு அடிகோலியுள்ளன. இதற்கான உலக அளவிலான ஒழுங்குமுறையை உருவாக்குவதில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்துகிறது.

ஆனால், நாடுகள் உருவாக்கும் கட்டுப்பாடுகளை விட அதிவேகமாக தொழில்நுட்பம் வளர்கிறது என்பதுதான் சிக்கல். உதாரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏஐ கட்டுப்பாட்டு வரைவு மசோதா உருவாக்கப்பட்டபோது, ஜெனரேட்டிவ் ஏஐ (உள்ளிடப்படும் பலவிதத் தரவுகளைக் கிரஹித்து உடனடியாக புதிய உள்ளடக்கத்தை உருவாக்குவது), எல்எல்எம் (செயற்கை நரம்பு வலைப்பின்னலால் இயக்கப்படும் கணினிக் கட்டுப்பாட்டு மொழிகள்) போன்ற செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிகள் இருந்திருக்கவில்லை. எனவே, ஏற்கெனவே உருவாக்கிய ஏஐ சட்டங்களை, இந்த செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியின் விளைவுகளையும் உத்தேசித்து மாற்றியமைத்தாக வேண்டியிருக்கிறது.

மேலும், முடிவுகளை எடுப்பதில் அரசாங்கங்களின் வியூக அறைகளிலும் ராஜதந்திரப் பேச்சுகளிலும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டுப் பங்களிப்பு அதிகரித்திருப்பது, அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. செயற்கை நுண்ணறிவால் செயல்படும் மாயத்தோற்றத் தொழில்நுட்பங்கள் ஒருவரைப் போலவே போலியை உருவாக்குவதில் மிகவும் ஆபத்தாக உள்ளன. இது தகவல் பரிமாற்றத்தில் தீவிர ஆபத்தான ஆயுதமாக மாறி வருகிறது. இது சமுதாயத்தின் பிம்பத்தையே எதிர்மறையாக மாற்றிவிடக் கூடிய ஆபத்தாகும்.

இவ்வாறாக செயற்கை நுண்ணறிவு சாம்ராஜ்ய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நேரத்தில் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழக கணினி விஞ்ஞானி ராய் அமாராவின் விதியைத்தான் நினைவுபடுத்த வேண்டும். 'தொழில்நுட்பத்தின் குறுகிய கால அளவிலான தாக்கத்தை நாம் மிகவும் அதிகமாக மதிப்பிடுகிறோம். அதே சமயம், தொழில்நுட்பத்தின் நீண்டகாலத் தாக்கத்தை மிகவும் குறைவாகவே மதிப்பிடுகிறோம்' என்று அவர் சொன்னதுதான் அடிப்படை உண்மையாகும். இந்த அடிப்படையில் இந்தியா செயற்கை நுண்ணறிவு தொடர்பான சட்டங்களை உருவாக்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவை மனிதநேயத்துக்கு எதிரான ஓர் அசுரனாக உருவகப்படுத்தும் குறுகியகால அதீத மதிப்பீட்டுத் தாக்கத்திலிருந்து விடுபட்டு, இதனை வளர்ச்சிக்கான கண்டுபிடிப்புகளுக்கும் மக்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டங்களுக்கும் நாற்றங்காலாக மாற்றுவது எப்படி என்று இந்தியா ஆராய வேண்டும்.

செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் செயல்முறைகளின் மூலமாக மக்களுக்கு வரக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிவதும், குறைந்த கட்டணத்தில் சிகிச்சை முறைகளை மேற்கொள்வதும் சாத்தியமே. விவசாயத்திலும் எந்தெந்த விளைபொருள்களை எக்காலத்தில் சாகுபடி செய்வது, விவசாய விளைபொருள்களை எவ்வாறு சந்தைப்படுத்துவது, விளைநிலங்களை மேலாண்மை செய்வது எப்படி என்று செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் தீர்மானிக்க முடியும்.

அதுமட்டுமல்ல, பல்வேறு மொழிகளில் பேச்சு உதவிக் கருவிகளையும், உச்சரிப்பு உணர் கருவிகளையும் உருவாக்க முடியும்; நிதி மேலாண்மையில் சிக்கலான தீர்வுகளை உருவாக்க முடியும்; செயற்கை நுண்ணறிவுத் தரவுகளின் அடிப்படையில் மக்களின் பாதுகாப்பையும் தனியுரிமைகளையும் உறுதிப்படுத்தியவாறே, அவர்களது சந்தைப் பங்களிப்பை அதிகரிக்கக்கூடிய புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்.

செயற்கை நுண்ணறிவின் ஆபத்தான விளைவுகளிலிருந்து பாதுகாக்கத் தேவையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவரும் அதேநேரத்தில், நமது மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அதன் தடையற்ற வளர்ச்சியையும் நமது சட்டங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

கட்டுரையாளர்:
**முன்னாள் மத்திய அமைச்சர்.**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# காசிமேட்டில் செயற்கை பவளப்பாறைகள்

**சென்னை, ஜூலை 27:** காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் மீன்வளத்தைப்பெருக்க ஆஸ்திரேலியா தூதரகம் சார்பில் செயற்கை பவளப்பாறைகள் நிறுவும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆஸ்திரேலியா தூதரகத்தின் 'பிளான்ட் டிரஸ்ட்' என்ற அரசு சாரா தொண்டு நிறுவன நிதியிலிருந்து ரூ.10 லட்சம் செலவில் சிமெண்டு கலவையால் கூம்பு மற்றும் வட்ட நாற்கர வடிவில் செய்யப்பட்ட 100 செயற்கை பவளப்பாறைகள் பைபர் படகுகள் மூலம் சுமார் 6 கி.மீ. தூரம் கடலுக்குள் எடுத்துச் செல்லப்பட்டு 20 அடி ஆழத்தில் நிறுவப்பட்டது.



ஆஸ்திரேலிய தூதரக நிதி உதவியுடன் சென்னை மீன்பிடி துறைமுகத்தில் மீன் வளத்தைப் பெருக்குவதற்காக ரூ.10 லட்சத்தில் செயற்கை பவள பாறைகள் தயார் செய்து கடலில் நிறுவும் நிகழ்ச்சியை வியாழக்கிழமை தொடங்கி வைத்த மீன்வளத் துறை கூடுதல் முதன்மைச் செயலர் மங்கத் ராம் சர்மா. உடன், ஆஸ்திரேலிய தூதரக அதிகாரி சாரா கிர்லவ் உள்ளிட்டோர்.

இந்த நிகழ்ச்சியை ஆஸ்திரேலிய தூதரக அதிகாரி சாரா கிர்லவ், தமிழக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் முதன்மைச் செயலர் மங்கத் ராம் சர்மா ஆகியோர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்.

இதில் ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள், பிளான்ட் டிரஸ்ட் உறுப்பினர்கள், மீன்வளத்துறை அதிகாரிகள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஊரகப் பெண்களுக்கு நடமாடும் புற்றுநோய் பரிசோதனை

## ஸ்ரீ ராமச்சந்திராவில் தொடக்கம்

**சென்னை, ஜூலை 27:** கிராமப்புற மகளிருக்கு புற்றுநோய் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனைக்கு ரோட்டரி சங்கம் சார்பில் பேருந்து வழங்கப்பட்டது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

கிராமப்புற ஏழை மகளிரின் வசிப்பிடங்களுக்கே சென்று புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்வதற்கு வசதியாக வடபழனி ரோட்டரி சங்கம் ரூ.2.6 கோடி மதிப்பிலான ஒரு பேருந்தையும், மருத்துவக் கருவிகளையும் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனைக்கு வழங்கியுள்ளது.

அதில், மார்பகப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான மேமோகிராம் கருவியும், அல்ட்ரா சவுண்ட் கருவியும், கர்ப்பப் பைவாய் புற்றுநோயைக் கண்டறிவதற்கான பேப்ஸ்மியர் பரிசோதனை வசதிகளும் உள்ளன.

அதன்படி, அந்த பேருந்தின் மூலம் மருத்துவர்களும், மருத்துவ ஆய்வக நுட்பனர்களும், தமிழக கிராமங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள ஏழை மகளிருக்கு புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ள உள்ளனர்.

முன்னதாக, கமலம் உடையார் எனப் பெயரிடப்பட்ட அந்த நடமாடும் புற்றுநோய் பரிசோதனை பேருந்தின் சேவையை மாநில சமூகநல ஆணையர் அமுதவல்லி, ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைவேந்தர் உமா சேகர், ரோட்டரி சங்கத்தின் பன்னாட்டு இயக்குநர் அனிருத் ராய் சௌத்ரி மற்றும் மாவட்ட கவர்னர் நந்தகுமார் உள்ளிட்டோர் தொடக்கி வைத்தனர்.

# கோப்பையுடன் பொம்மன், பெள்ளி...




நீலகிரி மாவட்டம் குன்னூரில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டிக்கான கோப்பையுடன் யானைப் பாகன் பொம்மன் மற்றும் பராமரிப்பாளர் பெள்ளி. இவர்கள் அங்கம் வகித்து, ஆஸ்கர் விருது வென்ற 'தி எலிஃபென்ட் விஸ்பரர்ஸ்' ஆவண திரைப்படத்தில் இடம்பெற்ற யானையை மையப்படுத்தியே சென்னையில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டிக்கான இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த யானை உருவத்துக்கு 'பொம்மன்' என பெயரிடப்பட்டுள்ளது.